Registered as a News Paper in Sri Lanka

பக்கங்கள் 04    விலை ரூபா 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 01    பிரமோதூத ஞூ    மீ ஆடி 5 ஆம் உ    சனிக்கிழமை    (21 - 07 - 1990)    ஹிஜ்ரி 1410    ஜுல்ஹஜ் 27    ஓசை 153

## நேபாம் குண்டுகளுடன் நோய் பரப்பும்புதியரசாயனக்குண்டுகள்

நேற்றுமாலை யாழ்.நகரில் ஸ்ரீலங்கா இராணுவம் துர்நாற்றம் வீசும் புதுவித இரசாயனக் கலவை கொண்ட பீப்பாக்களை வீசியது இப் புதிய பீப்பாக் குண்டுகள் மக்களுக்குத் தொற்றுநோய் பரவக்கூடிய நோய்க்கிருமிகளைக் கொண்ட இரசாயனக் கலவையைக் கொண்டதாக இருக்கலாம் என விடுதலைப் புலிகள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா அரசு சர்வதேசத்தாலும் தடைசெய்யப்பட்ட நேபாம் குண்டை ஒத்த எரியூட்டும் பீப்பாக்களைத் தமிழீழமெங்கும் தொடர்ந்து வீசிவரும் அதே

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழத்தின் வரலாற்றில் முதல் முறையாக 25பேர்பட்டினி சாவு!

## 3000 தமிழர் படுகொலை; 8 லட்சம் அகதிகள்; அரசின் பிரசாரத்துக்கு சர்வதேச அமைப்புகளும் உடந்தை!

(யாழ்ப்பாணம்)

"சிறிலங்கா சிங்கள அரசு தமிழ்மக்களுக்கெதிராகக் கொண்டுவந்துள்ள பொருளாதாரத் தடைகளினால் தமிழீழத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முதல்தடவையாக இருபத்தைந்துக்கு மேற்பட்ட தமிழ்மக்கள் பட்டினியால் இறந்துள்ளனர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்ற சர்வதேச அமைப்புக்கள் மூலம் உணவு, மருந்துப் பொருட்களைத் தமிழீழத்துக்கு அனுப்பிவருவதாகப் பிரசாரம் செய்து உலகை ஏமாற்றுகிறது சிறிலங்கா அரசு. இதை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் போன்ற அமைப்புக்கள் மறுக்காமல் அரசுக்குத் துணைபோகின்றன. எனவே உலகநாடுகள் தமிழ்மக்களுக்கு நேரடியாக உதவியளிக்க முன்வரவேண்டும்."

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நேற்று விடுத்த அறிக்கையில் கோரியுள்ளது. அந்த அறிக்கை வருமாறு :-

கடந்த இரண்டு நாட்களில் மட்டக்களப்பில் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் இறந்துள்ளனர். தமிழீழத்தில் உணவின்றிப் பட்டினியால் தற்போதுதான் முதன்முதலில் மக்கள் இறந்துள்ளனர்.

### மூவாயிரம் தமிழர் படுகொலை

சிங்கள அரசால் அமுல்ப்படுத்தப்படும் உணவுத்தடை, எரிபொருள்த்தடை, மருத்துவத்தடை என்பனவற்றால் பல மக்கள் இறக்கும் சூழ்நிலை ஏற்பட்டுவருகின்றது. 11-6-90

பட்டுள்ளனர். எட்டு இலட்சத்திற்கும் மேலான தமிழ் மக்கள் அகதிகளாகியுள்ளனர்.

அகதிகளாக கோயில்களில், பாடசாலைகளில் தஞ்சமடைந்த பல அப்பாவித் தமிழ்ப் பெண்கள் சிங்களப் படையால் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர், பல இளம் ஆண்களும், பெண்களும் கைதுசெய்யப்பட்டு அழைத்துச்செல்லப்பட்டு பின் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர்.

பல அகதிமுகாம்கள் குண்டு வீசித் தாக்கப்பட்டுள்ளன.

### காடுகளில் வாழும் அகதிகள்

இதனால் பல்லாயிரக்கணக்கான அகதிகள் முகாம்களை விட்டு வெளியேறிக் காடுகளில் வாழ்கின்றனர். இதனால் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் உணவின்றிப் போதிய மருத்துவ வசதிகளின்றி இருக்கின்றனர். கடலில் அகதிகளாக இந்தியா தப்பிச்செல்ல முயன்ற 300க்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் சுட்டுக்கொல்லப்

## நாய்கள் இழுத்த

## மட்டக்களப்பில் தினசரி 5, 6 தமிழர் சடலங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரத்தில் இருந்து ஒவ்வொரு நாளும் 5, 6 தமிழ் மக்களின் சடலம் எரிந்த வண்ணம் இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

அத்துடன் தோற்றாந்தீவு அகதி முகாமில் இருந்து பத்தொன்பதாம் திகதி ஐந்து ஆண்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கல்முனை இராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

## மட்டக்களப்பில் பரவலாக எரிந்த சடலங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் கடந்த பத்தொன்பதாம் திகதி ராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட பொதுமக்களின் சடலங்கள் கருகிய நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பலுகாமத்தில் 9 சடலங்களும், கோவில் பேருத்தீவில் 12 சடலங்களும், பெரிய போரைதீவில் 8 சடலங்களும், வெள்ளாவெளியில் 5 சடலங்களும், கற்சேனையில் ஒரு சடலமும் கருகிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## தீவிரவாதிகளின் பிரச்சினைக்கு தீர்வுகாண ரஞ்சன் உறுதி

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் நிலைமைகள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. என்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரட்னா பாராளுமன்றத்தில் கூறினார்.

அவசரகால சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதம் நடைபெற்ற போது அவர் உரையாற்றினார்.

வட பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையில் மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகினால்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியா நகரப்பகுதியில்

## கட்டடங்கள்,வீடுகள்,மதில்கள் படையினரால் தகர்ப்பு

(வவுனியா)

வவுனியாவில் இராணுவத்தினரால் வீடுகள், மதில்கள், கடைகள் போன்றவை தகர்க்கப்பட்டுவருவதாக அறியப்படுகிறது.

வவுனியா ஜோசெப் முகாமுக்கு எதிரேயுள்ள வீடுகளும், மதில்களும், கடைகளும் மேடது.

மேற்படி முகாமை பாதுகாக்கும் நோக்குடன், தீவிரவாதிகளைக் கண்காணிப்பதற்காகவே இவை தகர்க்கப் பட்டனவாம்.

இராணுவத்தினரின் ஷெல் தாக்குதல்களினால் ஏற்கனவே பல வீடுகளும்,

### வடக்கு - கிழக்கை அரசாங்கம்

## கட்டுப்பாட்டில் வைத்திருப்பதே அனைத்துக் கட்சி விருப்பம்

(டில்லி)

இலங்கையின் வடக்குக், கிழக்குப் பிரதேசங்களை அரசாங்கம் தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவருவதையே இலங்கையிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் விரும்புகின்றன என்று சபாநாயகர் எம். எச். மொகமட் இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ.கே. குஜராலுக்குத் தெரிவித்துள்ளார்.

இவ்விடயங்கள் குறித்துத் தமக்கும் ஏனைய கட்சிகளுக்குமிடையில் ஒற்றுமை காணப்படுவதாகவும், இதனால்தான் இம்முறை இனக் கலவரம் ஏற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியாக் கச்சேரி

## ஊழியர்களுக்கு ஜூன் மாதச் சம்பளம்வழங்கப்படுகிறது

(வவுனியா)

வவுனியா கச்சேரி ஊழியர்கள் அனைவருக்கும் ஜூன்மாதத்திற்கான ஊழியப் பணம் வழங்கப் பட்டுவருகிறது.

வவுனியா அரசாங்க அதிபர் திரு. செ. பத்மநாதன் எடுத்த ...ங்கி வரும் கச்சேரி அலுவலகத்தில் வைத்து மேற்படி ஊதியப் பணம் வழங்கப் பட்டுவருகிறது.

இராணுவ நடவடிக்கைகளுக்கு அஞ்சி யாழ் மாவட்டத்தில் தங்கியுள்ள வவுனியா

டுகிறது.

வவுனியா ஜோசெப் முகாமுக்கு எதிரேயுள்ள வீடுகளும், மதில்களும், கடைகளுமே இராணுவத்தினால் தகர்க்கப்பட்டுவருவதாகக் கூறப்பட்

வாம்.

இராணுவத்தினரின் ஷெல் தாக்குதல்களினால் ஏற்கனவே பல வீடுகளும், கடைகளும் சேதமடைந்து இருப்பது குறிப்பிடத்தக்கது. (தி)

த்தடை என்பனவற்றால் பல மக்கள் இறக்கும் சூழ்நிலை ஏற்பட்டுவருகின்றது. 11-6-90 இல் இருந்து இன்றுவரை 3000 அப்பாவிப் பொதுமக்கள் விமானப்படையால் கொல்லப்

முயன்ற 300க்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். அவர்களின் பலரது உடல்கள் யாழ்நகரின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

வழங்கப்பட்டுவருகிறது.

வவுனியா அரசாங்க அதிபர் திரு. செ. பத்மநாதன் எடுத்த துரித நடவடிக்கையினால் நொச்சிமோட்டை பாடசாலையில் தற்காலிகமாக இய

ளுக்கு அஞ்சி யாழ் மாவட்டத்தில் தங்கியுள்ள வவுனியா கச்சேரிஊழியர்களுச்கும்ஜூன் மாதத்திற்கான ஊதியம் வழ

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் உயிர்களைப் பாதுகாக்க இந்தியா ராஜீக நடவடிக்கை

## வி. பி. சிங்

(புதுடில்லி)

இலங்கையில் உள்ள தமிழர்களின் நிலை குறித்து கவலை அடைந்துள்ள இந்திய அரசு அவர்களின் உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பு அளிக்க ராஜீக முறையில் சில புதிய முன் முயற்சிகளை எடுக்கும்.

இவ்வாறு பிரதமர் வி. பி. சிங் நேற்று செய்தியாளரிடம் தெரிவிததார்.

இலங்கைப் பிரச்சினையில் இந்தியா இராணுவ ரீதியாக தலையிட முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு முகாம்கள் அமைக்க பல நாடுகளின் ஒத்துழைப்புடன் இந்தியா உதவி வழங்க முடியுமா என்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இலங்கையில் அரச படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் சண்டை வலுவடைந்து வருவது குறித்து இந்தியாவின் கவலையையும் பிரதமர் தெரிவித்தார்.

இலங்கை இனப் பிரச்சினை குறித்து மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் இடையில் கருத்து வேற்றுமை எதுவும் இல்லை.

தீவிரவாத நடவடிக்கைகளுக்கு தமிழகத்தைத் தளமாகப் பயன்படுத்துவதை மத்திய அரசும், மாநில அரசும் அனுமதிக்காது என்றும் பிரதமர் கூறினார்.

## நாய்கள் இழுத்த மனித தலை

(யாழ்ப்பாணம்)

வண்ணை கோம்பையன் மணல் மயானத்தில் எரிந்த நிலையில் இருந்த சடலத்தின் தலையை நாய்கள் இழுத்துச் சென்று வீடொன்றின் முன்பு வைத்தபோது பொதுமக்கள் அதனை மீண்டும் மயானத்தில் சேர்த்து தகனம் செய்தனர்.

## பிரேமாவின் கொடும்பாவி எரிப்பு

(சென்னை)

இலங்கையில் தமிழர் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து நேற்று தமிழ் நாட்டில் நடந்த கதவடைப்பின் போது இலங்கை ஜனாதிபதியின் கொடும்பாவி ஒன்று நகரில் எரிக்கப்பட்டது.

இக்கொடும்பாவி எரிப்பு திராவிடக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டது. இதனால் திராவிடர்கழகத் தொண்டர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

## கல்லைக்கட்டி வாவியில் போட்டனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்லடியைச் சேர்ந்த மீன்வியாபாரி ஒருவரை இராணுவத்தினர் அழைத்துச்சென்று உயிருடன் தலையில் உரப்பையைக்கட்டி உடல் முழுவதும் கற்களைக் கட்டி கல்லடி வாவிக்குள் போட்டுள்ளனர்.

## முல்லைத்தீவில் மோதல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்து இம்மாதம் பத்தொன்பதாம்திகதி காலை 11 மணியளவில் வெளிவந்த இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் திரும்பிச் சென்றுள்ளனர். சேதவிபரங்கள் பற்றி இதுவரை தெரியவில்லை.

## கூட்டுறவுச் சங்கங்களிலும் பொருட்கள் விலை ஏற்றம்

(வவுனியா)

வவுனியா கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் அத்தியாவசியப் பொருட்கள் வழமையை விட அதிக விலைக்கே விற்பனை செய்யப்படுகின்றன.

ஒரு கிலோ கிராம் மா 17 ரூபாவிற்கும், ஒருகிலோகிராம் சீனி 33 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

தற்போதைய நெருக்கடி நிலையில் பொருட்களின் விலைகளை அதிகரித்தே விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும், நகரப் பகுதிக்குலொறிகளையனுப்பி விநியோகப் பகுதி களஞ்சிய அறையிலிருந்துபொருட்களை ஏற்றி வருவதில் கூட்டுறவுச் சமாசத்திற்குப் பெரும் செலவு ஏற்பட்டிருப்பதாகவும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் தபால் சேவை தொடர்ந்தும் ஸ்தம்பிதம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் தொடர்ந்து தபால் சேவை சீர்குலைந்துள்ளது.

கடந்த மாதம் இராணுவத்தினரின் தாக்குதல் நடவடிக்கையை அடுத்து தபால் சேவை சீர்குலைந்துள்ளது.

வவுனியா பிரதம தபால் அலுவலகப் பகுதியில் இராணுவத்தினரின் நடமாட்டமே காணப்படுகிறது.

உள்ளூர் தபால் சேவை கூட செயல்படாமல் இருப்பதால் வவுனியா பகுதி மக்கள் பெரும் துயரமடைந்துள்ளனர்.

தபால் சேவை ஊழியர்கள் பலர் வெவ்வேறு இடங்களை நோக்கி இடம் பெயர்ந்து சென்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (தி)

## குப்பிளானில் குண்டுவீச்சு

(தெல்லிப்பளை)

கடந்த செவ்வாய்க் கிழமை காலை குப்பிளான் சந்திக்கு அண்மையாக பொம்மர் விமானங்கள் குண்டுகளை வீசின. இதில் ஒரு குடிசை வீடு இடிந்து முற்றாக சேதமுற்றது. இதற்கு அருகில் இருந்த சில

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தபாற் கந்தோர் துர்க்காபுரத்தில்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை தபாற் கந்தோரிற்கு அண்மையில் குண்டு வீச்சு மேற்கொள்ளப்பட்டமையால் தபாற் கந்தோர் துர்க்காபுரத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா நகரில் அகதி முகாம்கள் அமைக்க இராணுவம் முயற்சி

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதியில் அகதி முகாம்கள் பல அமைத்து, அவற்றில் கிராமங்களில் தங்கியுள்ள அகதிகளை குடியமர்த்த இராணுவ அதிகாரிகள் முயற்சி எடுத்து வருவதாக அறியப்படுகிறது.

கடந்த மாதம் 13ஆம் திகதிக்குப் பின்னர் வவுனியா நகரப் பகுதியில் இராணுவத்தினரின் தாக்குதல் நடவடிக்கையை அடுத்து பல்லாயிரக் கணக்கான அகதி மக்கள், தமிழ் மக்கள் நெருக்கமாக வாழும் கிராமப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளிலும், கோவில்களிலும், நண்பர்கள் உறவினர்களின் வீடுகளிலும் தங்கியிருப்பது தெரிந்ததே.

இந்த அகதி மக்கள் அனைவரையும், நகரப் பகுதியில் இராணுவம் அமைத்துக் கொடுக்க இருக்கும் அகதி முகாம்களில் தங்க வைத்த பின்னர், வவுனியா மாவட்டத்தில் உள்ள கிராமங்களில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்அகதிகளைதிருப்பிஅனுப்ப கருணாநிதியிடம்கோரியுள்ளேன்

### - பாராளுமன்றத்தில் ரஞ்சன்

(கொழும்பு)

தமிழ் நாட்டிற்கு சென்ற இலங்கை அகதிளை மீண்டும் இங்கு திருப்பி அனுப்புமாறு தமிழக முதல்வர் கருணாநிதியிடம் தாம் கேட்டுள்ளதாக அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

இவர்கள் இங்கு மீளக்குடியமர்த்தப்படும் வரை இவர்களை நன்குகவனிக்கவும் அரசு ஏற்பாடு செய்துள்ளதெனவும் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு பாது[illegible]ப்பாக மன்னாரில் நிலமும் [illegible]துக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.



## 33 கிலோ நிறையுள்ள பிறவுன்சுகர் கைப்பற்றப்பட்டது

(புதுடில்லி)

தூத்துக்குடி கடல் பகுதியில் வைத்து 'பிறவுன் சுகர்' என்ற போதைப்பொருள் இருந்த படகு ஒன்றை சுங்கப்பகுதியினர் கைப்பற்றியுள்ளனர்.

இந்தப்படகு இலங்கைக்குச் செல்லவிருந்ததாகவும், இதில் முப்பத்திமூன்று கிலோ போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைப் பிரஜை ஒருவர் உட்பட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## அரச அதிபருக்கு பதிலாக ராணுவ அதிகாரி

(வவுனியா)

வவுனியா அரசாங்க அதிபரை மாற்றி, அவருக்குப் பதிலாக கேணல் எஸ். பி. ரத்னாயக்காவை இணைப்பதிகாரியாக நியமித்துள்ளனர்.

இதனால் வவுனியா கிராம சேவையாளர்கள் இணைப்பதிகாரியை சந்திக்க பயப்படுகின்றனர்.

## மாங்குளத்தில் சண்டை

இம்மாதம் பத்தொன்பதாம் திகதி மாங்குளம் முகாமில் இருந்து வெளியேற முற்பட்ட இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் சண்டை நடைபெற்றது.

சேதவிபரம் இதுவரை அறிவிக்கப்படாத போதிலும், இராணுவம் பின்வாங்கி முகாமுக்குத் திரும்பிச்சென்றது.

### வவுனியா கிராமங்களில் இருந்து

# மக்கள் வெளியேற்றம்; அகதிகள் படகு மூழ்கியது; அரிசி ஆலைகள் சேதம்

(வவுனியா)

வவுனியாவில் எல்லைப் புறக்கிராமங்களில் இருந்தும் நகரை அண்டிய கிராமங்களில் இருந்தும்பெருந்தொகையான மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர். இவர்களில் ஒருபகுதியினர் இந்தியாவிற்கு அகதிகளாக இடம்பெயர்ந் துள்ள அதேவேளை, பெரும் பாலானவர்கள் பாடசாலை களிலும் கோவில்களிலும் அக திகளாகத் தஞ்சம் அடைந் துள்ளனர்.

இவ்வாறு வவுனியாவில் இருந்து அகதிகளாக வெளி யேறி இந்தியாவுக்குச் சென்ற அகதிகளின் படகொன்று கவிழ்ந்து 30 பேர் நீரில் மூழ்கி இறந்தனர்.

வவுனியாவிலிருந்து பண்டா ரிக்குளம், கூமாங்குளம், மகாறம்பைக்குளம், ஆச்சிக் குளம், வைரவப்புளியங்குளம், பூந்தோட்டம், கறுப்பணிச் சான்குளம், அல்லப்பர் மகுளங் குளம், கோமரசங்குளம், பட் டாளிச்சியூர், புளியங்குளம், தம் பனைச்சேனை, தவசிக்குளம், தோணிக்கல், தெற்கு இலுப் பைக்குளம், வெளிக்குளம், முருங்கன்ஊர், தாண்டிக் குளம், குருமன்காடு, சம் மணங்குளம், கோலிப்புதுக் குளம், வேப்பங்குளம், சின் னப்புதுக்குளம், காத்தார் சின் னக்குளம், கல்வீரங்குளம், மகுழங்குளம், உக்குளான் குளம், மூன்று முறிப்பு, கரப் பன்காடு, யூசிக்குவாட்டோஸ், சிதம்பரம். கல்லாண்டகுளம், குடியிருப்பு, இராசேந்திரங் குளம். சாந்தாமலை, சேனைப் பிள்ளையார்குளம், வண்ணார் சின்னக்குளம், நொச்சிக்குளம், டண்டானிச்சி புளியங்குளம் ஆகிய இடங்களில் உள்ள 45,000 மக்கள் கிராமங்களை விட்டு வெளியேறி ஆலயங் கள், பாடசாலைகள் ஆகிய இடங்களில் தஞ்சமடைந்துள் ளனர். ஏனையோர் இந்தியா வுக்கும், முஸ்லிம் மக்கள் மத வாச்சிக்கும் சென்துள்ளனர்.

வவுனியாவில் உள்ள திருச் செந்தூர், உதயா, அரசன் ஆகிய மூன்று அரிசி ஆலையில் உள்ள 20ஆயிரத்துக்கும் மேற் பட்ட நெல மூடைகளை எரித்து நாசம்செய்துள்ளனர். மேலும் பண்டாரிக்குளம், கூமாங்குளம் ஆகிய கிராமங்க ளில் உள்ள 200 குடிசைகள் தீக்கிரையாகி உள்ளது.

மன்னார் வீதி இரண்டாம் கட்டையில் உள்ள வீடுகள் அனைத்தும் உடைத்துக் கொள்ளையடித்த பின் மிகுதி வீடு, தளபாடங்கள் அனைத் தையும் வீட்டுக்குள் போட்டு தீயிட்டுள்ளார்கள், வவுனியா நகரத்தில் உள்ள கடைகள் பொருட்களுடன் தீயிடப்பட் டுள்ளது. சிலகடைகள் உடைத்துக் கொள்ளையிடப் பட்டுள்ளன.

## வவுனியா மாவட்டத்தில் 8410 குடும்பங்கள் அகதிகள்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் தத்தமது இருப்பிடங்களை விட்டு, வெளியேறி, உறவினர் கள், நண்பர்கள் வீடுகளிலும் அகதி முகாம்களிலும் தஞ்ச மடைந்திருக்கும் குடும்பங் களின் தொகை 8410 என்று வவுனியா அரசாங்க அதிபரி னால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் உள்ள நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் மேற்படி எண்ணிக்கையில் அமைந்த குடும்பங்கள் அகதிகளாக வெளியேறி இருப்பதாக அர சாங்க அதிபரின் அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள் ளது.

வவுனியா தெற்கு தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரி வில் 6327 குடும்பங்களும், நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 399 குடும்பங் களும், வவுனியா செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரி வில் 538 குடும்பங்களும் வவு னியா சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 1146 குடும் பங்களும் அகதிகளாகி இருப்ப தாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள் ளது.

வவுனியா சிங்கள உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வாழ்ந்து வந்த சிங்கள மக்க ளுக்கு அண்மைக் கால வன் செயல்களின்போது எதுவித பாதிப்பும் இடம்பெறவில்லை என்ற போதிலும் பல சிங்க ளக் குடும்பங்கள் தமது வீடு களை விட்டு இடம்பெயர்ந்து மதவாச்சியிலும், அனுராத புரத்திலும் உள்ள அகதி முகாம்களில் தஞ்சமடைந் துள்ளன என்பது குறிப்பிடத் தக்கது. (தி)

## வயல்களில் குண்டு வீச்சு விவசாயிகள் சுட்டுக் கொலை

(அம்பாறை)

அம்பாறை சேனைக்குடி யிருப்பில் கடந்த பதினொ ராம் திகதி வயல்களில் நடை பெற்ற குண்டுவீச்சினால் பெரு மளவு பயிர்கள் சேதமடைந் துள்ளன.

மேலும் அதே இடத்தில் அன்றைய தினம் மூன்று விவ சாயிகளையும் சிங்கள இரா ணுவத்தினர் சுட்டுக் கொன் ...சாயிகள் வயல்களுக்குச் செல் வதில்லை.

சிதம்பரம் பாஸ்கரா வயது 19, பொன்னையா பேரின் பன் வயது 35 (இவர் நான்கு பிள்ளைகளின் தந்தை) இவர் களுடன் மேலும் ஒருவராக மூவரே இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டவர் கள்.

கொன்ற பின்னர் இவர்க ளின் உடல்களை இராணுவத்

## அம்பாறையில் இராணுவம், ஜிகாத் அட்டகாசம்!

(அம்பாறை)

அம்பாறையில் ஜிகாத் இயக்கத்தவர்களும், சிங்கள இராணுவத்தினரும் கூட்டா கச் சேர்ந்து பொதுமக்களின் வீடுகளையும், கடைகளையும் எரித்தும், பொதுமக்களைச் சுட்டுக் கொன்றும், கொள் ளையடித்தும் பெரும் அட்ட காசம் புரிந்து வருகின்றனர்:

கடந்த பத்தாம் திகதி சேனைக்குடியிருப்பு கிராமத் தில் ஜிகாத்இயக்கத்தவர்களும் ஸ்ரீலங்கா இராணுவத்தினரு மாகச் சேர்ந்து இருபத்தை ந்து வீடுகளையும், இரண்டு கடைகளையும் எரித்துள்ள னர். மேலும் கோயில் ஒன் றும் இவர்களால் கொள்ளை யிடப்பட்டு தீயிடப்பட்டுள் ளது.

கடந்த பதின்மூன்றாம் திகதி சொரிக்கல்முனை என்ற இடத்தில் பாதர் செல் வராசா என்பவர் அகதி முகாமிற்கு உதவி செய்வதற் கென வைத்திருந்த முப்பதி னாயிரம் ரூபாவை கொள்ளை யடித்த இராணுவத்தினர் பின்னர் அவரைச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

கல்முனையில் ஜிகாத் இயக் கத்தவர்கள் கடந்த பதினைந் தாம் திகதி சண்முகம் என் பவரைச் சுட்டுக் கொன்றுள் ளனர். (ம)

### பொது மக்கள் கொலை

## இராணுவ அதிகாரி ஏற்பு அமைச்சர் மறுப்பு

## பகிஷ்கரிப்புக்கு ஆதரவாக கல்வி நிறுவனம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ்பேசும் மாணவர் ஒன் றியத்தின் பரீட்சைப் பகிஷ்க ரிப்புக்கு ஆதரவாக தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கை ஒன் றில்.

''கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் மாணவர்கள் அனைவரும் முற்றாக இடம் பெயர்ந்துள்ளனர். வடக்கில் பாடசாலைகள் அனைத் தும் முற்றாக மூடப்பட்டுள் ளன. பாடசாலைகள் பல அகதி முகாம்களாக்கப்பட்டுள் ளன. இந் நிலையில் பரீட்சை பற்றி மாணவர்களால் சிந் திக்க முடியுமா'' என்ற கேள் வியை எழுப்பியுள்ளதுடன்

''மாணவர்களின் இப் போராட்டம் நியாயமானதே. இப் போராட்டம் வெற்றிய ளிக்க சகல தனியார் கல்வி நிறுவனங்களும் முழு அளவில் ஒத்துழைப்பு நல்கும், இப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் முதற் கட்டமாக சகல தனியார் கல்வி நிறுவனங்களும் ஆவணி மாதம் பத்தாம் திகதி வரை யில் தமது வகுப்புக்களை இடை நிறுத்தியுள்ளன'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குருநகர் மீது குண்டு வீச்சு

(விசேட நிருபர்)

நேற்று முன்தினம் மாலை இரு தடவைகள் யாழ்-குரு நகர் பகுதியில் குண்டு வீச்சு விமானங்கள் மூன்றுக்கும் மேற்பட்ட குண்டு வீச்சை நடத்தின.

அடப்பன் வீதியில் யேம்ஸ் ரீச்சர், தொம்மைக்குட்டி, சிறீ, யேசுதாஸன், வலத்தி சர், யோசேப், தம்புக்குட்டி ஆகியோரது வீடுகள் பலத்த சேதம் அடைந்தன.

இவைதவிர பத்துக்கும் மேற்பட்ட வீடுகள் சிறு சேதம் அடைந்துள்ளன. மேலும் சில குண்டுகள் மத்தி யூஸ் வீதி, யாழ்-ஆசனக்கோ வில், யாழ்-ஆயர் இல்லப் பகு திகளில் வீழ்ந்து வெடித்தன.

அப்பகுதியில் வீழ்ந்த குண்டு களில் இருந்து துர்நாற்றம் வீசியது. (21)

## குருநகர் மக்கள் இடம்பெயர்வு

(கொழும்புத்துறை)

அண்மையில் தொடர்ந்து யாழ். கோட்டைப்பகுதி யாழ். சின்னக்கடை, குருநகர் பகுதிகளில் பொம்மர்கள், விமானங்கள்குண்டுவீச்சுத்தாக் குதல்களை அடுத்து இப்பகுதி களில் உள்ள பெரும்பாலான மக்கள் நிரந்தரமாகத் தமது பெறுமதிமிக்க பொருட்களு டன் இடம் பெயர்ந்து வருகி ன்றார்கள். இப்பகுதி வாழ் மக்கள் தங்கள் வீட்டுப்பொரு ட்களை வண்டிகள், லொறி களில் ஏற்றுவதில் மிக்க அக் கறை செலுத்தி வருகின்றார் கள். (24)

## பரீட்சையைப் பகிஷ்கரிக்க மாணவர் ஒன்றியம் முடிவு

(யாழ்ப்பாணம்)

பாதகமான சில விளைவு கள் ஏற்படினும் கூட, தற் போதைய சூழ்நிலையில் க. பொ. த. உயர்தரப் பரீட் சையைப் பகிஷ்கரிப்பதென தமிழ் பேசும் மாணவர் ஒன் றியம் முடிவெடுத்துள்ளது.

இந்தப் பகிஷ்கரிப்புக் குறித்து மேற்படி ஒன்றியத் தின் அமைப்புக் குழுவினால் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

''கல்வித் திணைக்களங் கள், கல்வி அதிகாரிகள், ஆசி ரியர்கள், அதிபர்கள் ஆகி யோர் பரீட்சை நடத்துவதற் கான எந்த நிர்வாக நடவ

## முதலுதவி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

நாச்சிமார் கோயிலடி ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலை யத்தினரால் ஒழுங்கு செய்யப் பட்டுள்ள முதலுதவி வகுப்பு இன்று சனிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு நிலைய மண் டபத்தில் நடைபெறும். விரும்புவோர் மேற்படி வகுப் புக்கு சமுகமளிக்கும்படி கேட் கப்பட்டுள்ளனர்.

## ஆதரவு இல்லாதோருக்கு நலன்புரி சங்கம் உதவுகிறது

(மானிப்பாய்)

வெளி மாவட்டங்களில் நடந்த யுத்தத்தில் காய மடைந்த இருபதுக்கும் மேற் பட்ட, உற்றார் உறவினர் களின் ஆதரவு இல்லாதோ ருக்கான, யாழ். போதனா வைத்தியசாலையில் முன்பு இயங்கி வந்ததும் தற்பொ ழுது மானிப்பாய் வைத்திய சாலையில் இயங்கி வரும் நோயாளர் நலன்புரிச்சங்கம் உதவி வருகிறது.

மானிப்பாய்வைத்தியசாலை யில் இயங்கிவரும் இச்சங்கம் உணவு வகைகள் உட்பட குழந்தைகளுக்கான பால்மா, மருந்துவகைகள் என்பனவற் றையும் இந்த நோயாளர் களுக்கு வழங்கி உதவி வரு கின்றது.

இச்சங்கத்தின் அதிகாரி ஒருவர் தமது சேவை பற்றி கூறும்பொழுது மேலும் ஆத ரவற்ற இயற்கை நோய்களால் பாதிப்புற்ற பத்துப் பேருக்கு தாம் உதவி வருவதாகவும் எவ்வளவு கஷ்டகாலம் வந் தாலும் தமது சேவை தொட ரும் எனவும் தெரிவித்தார். (லோ)


### வரிவிளம்பரம்

**காணவில்லை**

இல-12 திருமால் வீதி, திருக் கோணமலையில் வசித்த A.சுப்பிரமணியம் குடும்பத் தினரை பூவரசங்குளத்தைச் சேர்ந்த V. அருந்தவராசா தேடுகின்றார்.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி- S.அரசலிங்கம், (நட ராசா, வைத்தியசாலை முன் பாக) கந்தரோடை வீதி சுன் னாகம். (R/535

**காணவில்லை**

தேசிய வீடமைப்பு அதிகார சபையில் வேலை செய்யும் ஆலங்கேணியைச் சேர்ந்த க. இரவிச்சந்திரன் என்பவரை அவரது தம்பியார் க. இராஜ சேகர் என்பவர் தேடுகின் றார். தொடர்பு 15/8 தலை யாழி ஒழுங்கை, நாச்சிமார் கோயிலடி (R536)

**விற்பனைக்கு**

கோயில்களுக்கு தேவை யான பூசைமணி, அசையா மணி, திருவாசி, குத்துவிளக்கு ஸ்தூபி, வேல், சூலம் கும்பச் செம்பு அடுக்குத் தீபம், பஞ் சாலாத்தி, பட்டுக்குடை அனைத்துப் பொருட்களும் எம்மிடம் பெற்றுக் கொள்ள லாம். ஸம்ஸ்:- 297, K. K. S. றோட், தற்போது:- 76/2 நாவலர், றோட், சோனக தெரு, யாழ்ப்பாணம். (R-517)


## 25,000 அகதிகள்

(சென்னை)

கடந்த ஒருமாத இடைவெ ளிக்குள் இதுவரை 25 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழகம் வந்தடைந்துள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

றுள்ளனர். இத் தாக்குதல்களினால் பீதியடைந்த விவ

தினர் தீயிட்டுக் கொழுத்தியுள்ளனர். (ம)

## விடத்தல்தீவு அகதிகளுக்கு குடிதண்ணீர் தட்டுப்பாடு

(வவுனியா)

மன்னார் விடத்தல் தீவு பகுதியில் ஆயிரக்கணக்கான தமிழ் அகதிகள் தங்கி இருக்கின்றனர்.

இவர்கள் மன்னார் வழியாக தமிழகம் செல்ல முயற்சி செய்து கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

விடத்தல் தீவுப் பகுதியில் குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு நிலவுவதால், விடுதலைப் புலிகள் மேற்படி அகதிமக்களுக்கு வாகனங்கள் மூலம் தண்ணீர் ஏற்றிவந்து வழங்கிவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்தவாரம் நிகழ்ந்த படகு விபத்துக்குப் பின்னர் அகதிமக்களில் பலர் கடல் வழியாக இந்தியா செல்வதற்கு பின்வாங்குவது குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் வவுனியா, மன்னார் மாவட்டங்களிலிருந்து பல குடும்பங்கள் தமிழகம் செல்வதற்கான முயற்சியில் ஈடுபட்டுவருவதை அவதானிக்க முடிகிறது. (தி)

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் இராணுவ நடவடிக்கைகளின் மூலம் பெருந்தொகையான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளது உண்மை என்று பாதுகாப்புச் செயலாளர் திரு. சிறில் ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்கள் மத்தியில் பேசும் பொழுதே திரு.ரணதுங்க இந்த படுகொலைகள் குறித்து ஒப்புக்கொண்டுள்ளார்.

இதேவேளை அதே செய்தியாளர்கள் கூட்டத்தில் கலந்துகொண்ட பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் திரு ரஞ்சன் விஜேரத்னா பொது மக்கள் படுகொலை குறித்து முற்றாக மறுப்புத் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## சீனி கிலோ 65 ரூபா

நேற்று முன்தினம் காலை யாழ் முலவைச் சந்தியில் இரு கடைகளில் சீனி கிலோ 65 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டதைப் புலிகள் கையும் மெய்யுமாகப் பிடித்தனர்.

மேற்படி கடைகளைச் சோதனை போட்டதில் சீனி மூடைகள் கைப்பற்றப்பட்டதுடன் கடைக்காரர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டதாகவும் தெரியவருகிறது.

டிக்கையிலும் ஈடுபடாமல் ஒத்துழைப்பைக் கோருதல்;

எமது கோரிக்கையினை நிறைவேற்றுவதற்கான சூழ்நிலையினை ஏற்படுத்துவதற்குத் தனியார் கல்வி நிறுவனங்கள், பிரத்தியோக வகுப்புக்கள், தனிப்பட்ட நபர் வகுப்புக்கள் நிறுத்துவதற்காகக் கோருதல்;

க. பொ. த. (உயர்தர) பரீட்சைக்கு 1990ஆக. 10 இல் வடக்கு, கிழக்கில் மாணவர்கள் ஒன்று திரண்டு பரீட்சை நடாத்தினால் பகிஷ்கரித்தல் அத்துடன் வடக்கு, கிழக்கு மாணவர்கள் ஏனைய பகுதிகளிலுள்ள பரீட்சை மண்டபங்களில் பரீட்சைக்குத் தோற்றுபவர்களைத் தடுத்தல்''

உணவு வகைகள் உட்பட (லோ)

### சிறிலங்கா இராணுவத்தால்

## பெண் வைத்தியர் உட்பட எட்டு பெண்கள் மானபங்கம்; கொலை

(அம்பாறை)

ஒரு பெண் வைத்தியர் உட்பட எட்டுத் தமிழ்ப் பெண்களை சிங்கள இராணுவத்தினர் பாலியல் வன்முறைக்குள்ளாக்கிய பின்னர் அவர்களைக் கொலை செய்துள்ளனர்.

மேலும் ஒரு தமிழ்ப் பெண்ணை இராணுவத்தினர் பாலியல் வன்முறைக்குட்படுத்த முயன்றபோது அவர் தான் முஸ்லிம் பெண் என்று கூறி தப்பித்துக் கொண்டார்.

அம்பாறை காரைதீவுப் பகுதியில் அகதிகளாக இருந்த பெண்களையே ஶ்ரீலங்கா இராணுவத்தினர் இவ்வாறு பாலியல் வன்முறைக்கு உட்படுத்திக்கொன்றுள்ளனர். (ம


சிங்கள ஶ்ரீலங்கா ஆக்கிரமிப்பாளருக்கு எதிராக தீரத்துடன் போராடி

வீரமரணமடைந்த விடுதலைப் புலிகளுக்கு

எமது அஞ்சலிகள்!

மைசூர் அரிசி ஆலை

சுதுமலை, மானிப்பாய்.

(B.1275)

## சிந்தனைக்கு

ஆற்றிலே ஒரு கால்,
சேற்றிலே ஒரு கால்
- தமிழ்ப் பழமொழி

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 21-07-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# மீண்டும் அழைக்கும் முயற்சியா?

பேரினவாதப் பிரதமர்கள் இருவருக்குப் பிள்ளையாகத் தப்பாமல் பிறந்த அநுரா பண்டாரநாயக்கா புதுடில்லியில் நின்று இலங்கையில் இனப்படுகொலை நடக்கவில்லையென்று என்னதான் சொன்னாலும் தமிழர் இலங்கையில் படுகொலை செய்யப்படுவது கண்டு துடிக்கும் தமிழரின் வேதனையைத் தமிழகமும் பாண்டிச்சேரியும் நேற்று கடையடைப்பு ஹர்த்தால் மூலம் உலகுக்கு உணர்த்தியிருக்கிறது.

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணத்தில் இப்பொழுது நடைபெறும் போர் தமிழ் மக்களுக்கு எதிரானதல்லவென்றும் விடுதலைப்புலிகளுக்கெதிராகவே போர் நடைபெறுகிறதென்றும் சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவும் அவரது பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவும் அடிக்கடி கூறிவருகின்றனர்.

என்னதான் பதவிப் போட்டியும் ஆட்சி அதிகாரப் போட்டியும் இருந்தாலும் ''இனம் இனத்தை நாடும்'' என்பதற்கொப்ப தமிழ் இனத்தை அழிக்கும் விஷயத்தில் அநுரா பண்டாரநாயக்காவும் ரஞ்சன் விஜேரத்தினாவும் ஒன்று சேர்ந்து நிற்பார்கள்.

இந்த இன உணர்வும் ஒற்றுமையும் தமிழ் மக்கள் மத்தியிலிருக்குமானால் டில்லிக்குச்சென்ற தூதுக்குழுவில் மற்றவர்கள் எல்லோரும் மறுத்த பின்பும் ஒரு தமிழ்ப் பெண் சென்றிருப்பாரா?

பாரதிய ஜனதாக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்த இந்தப் பாராளுமன்றத் தூதுக்குழு ''வேண்டுமானால் நீங்களே வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு நேரில் வந்து பாருங்கள்'' என்று ஏதோ ஒப்புக்குச் சொல்லியிருக்கிறது. இதை பாரதிய ஜனதாக் கட்சிப் பொதுச் செயலர் அட்டர் பிஹாரி வாஜ்பாய் வரவேற்றிருக்கிறார்.

1977ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வருமுன்னர் சிறிமா பண்டாரநாயக்கா ஆட்சிக்காலத்தில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேசப் பாராளுமன்றப் பிரதிநிதிகளின் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு அப்போது இந்தியப் பாராளுமன்ற சபாநாயகராக இருந்த ஜி. எஸ். டில்லோன் எதிர்க்கட்சியிலிருந்த வாஜ்பாய், தமிழ்நாடு பிரதி சபாநாயகர் கணபதி ஆகியோரும் இந்தியப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் குழுவில் வந்திருந்தனர்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் கணபதியை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவரும் முயற்சி பலிக்கவில்லை. சபாநாயகர் டில்லோனையும் வாஜ்பாயியையும் யாழ்ப்பாணம் வர அழைத்தார்கள். ஏற்றுக்கொள்ளப்பட்டது.

விசேஷ விமானத்தில் தமிழரசுக்கட்சி எம்.பிக்களுடன்

ஸ்ரீலங்கா அரசு

# ஆயுதங்களை ஒப்படைத்தாலே பேச்சு என்பது அடிமை சாசனம் எழுதுவதற்கான அழைப்பே ஆகும்!

''தமிழீழ விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களை கீழே போட்டாலே அவர்களுடனான சமாதான பேச்சுக்கள் மேற்கொள்ளப்படும்.''

பௌத்த சிங்கள பேரினவாத அரசினாலும், பௌத்தத்தின் தலைவரான ரணசிங்க பிரேமதாசாவினாலும் அண்மையில் சில நாட்களாக எழுப்பப்பட்டு வரும் கோஷம் இது.

தமிழீழ விடுதலைப் புலிகளோ, தமிழீழ மக்களோ சமாதானத்துக்கு எதிரானவர்கள் அல்ல.

இருந்தும் சமாதானம் என்றால் என்ன? எந்த நிலையில் சமாதானம்? யாருடன் சமாதானம்? என்பதே இங்கு எழும் கேள்விகளாகும்.

### சமாதானம் என்றால் என்ன?

சமாதானம் என்பது தனது உரிமைகளை எதிரியிடம் தாரைவார்த்துக் கொடுப்பதற்கான ஒரு நடவடிக்கை அல்ல. மாறாக உரிமைகளை நிலைநிறுத்திக் கொள்வதற்கும், பாதுகாத்துக் கொள்வதற்குமான ஒரு ஆயுதமே ஆகும்.

இந்த சமாதானமானது ஆயுதபாணியான ஆளுவோனுக்கும், நிராயுதபாணியான ஆளப்படுவோனுக்கும்; ஆயுதபாணியான அடக்குவோனுக்கும், நிராயுதபாணியான அடக்கப்படுவோனுக்கும் இடையில் ஏற்படும் ஒன்றல்ல. இந்த இருவேறு சக்திகளுக்குமிடையில், இரு வேறுபட்ட நிலையில் உருவாக்கப்படுவது அடிமைச்சாசன உடன்பாடே ஆகும். மாறாக இதனை சமாதானம் என்று கொள்ளுவது வெறும் மாயையேயாகும்.

### எந்த நிலையில் சமாதானம்?

இரண்டு வேறுபட்ட சக்திகளுக்கிடையே உருவாவதுதான் சமாதானம். இந்த சமாதானம் இருவேறு சக்திகளுக்கிடையிலான சமபலம் (Bala-nce of Power) அந்த நிலையில் உருவாவதல்ல மாறாக சமபலத்தின் மத்தியில் கட்டுப்படுவதுதான் சமாதானமாகும். அதாவது அடக்குவோனுக்கும்-அடக்கப்படுவோனுக்கும், ஆளுவோனுக்கும்-ஆளப்படுவோனுக்கும் இடையில் சமபலம் பொருந்திய ஆயுத நிலையிலேயே சமாதானம் உருவாக முடியும். இது தான் நியதி.

இதற்கு நல்ல எடுத்துக்காட்டாக அமைவது பாலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் திரு. யாசீர் அரபாத்தின் ஒரு சிறு சம்பவமாகும். சில ஆண்டுகளுக்கு முன்பு ஐக்கிய நாடுகள் கூட்டத்தொடரில் வரலாற்று சிறப்புமிக்க பேருரை ஒன்றை நடத்தினார். நிராயுதபாணியான ஒரு நிலையில் அப்பேருரையை அவர் நடத்தவில்லை. ஆயுதப் பாணியாகவே நடத்தினார். ஒரு கையில் சமாதானத்துக்கான புறாவையும், மறுகையில் துப்பாக்கியையும் ஏந்திய நிலையில் 'யுத்தம் என்றால் யுத்தம்;' சமாதானம் என்றால் சமாதானம்'' என்று அவர் அந்தப் பேருரையில் கர்ஜனை செய்தது அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும், சியோனிச இஸ்ரேலியருக்கும் பெரும் சவாலாகவே அமையலாயிற்று. அடக்கப்படுவோனின் அறைகூவலான ''யுத்தம் என்றால் யுத்தம், சமாதானம் என்றால் சமாதானம்'' என்னும் இந்தக் கூற்றை பௌத்த சிங்கள பேரினவாத ஆட்சியாளர்கள் இன்றும் கொச்சைப் படுத்தி வருவதையும் நாம் உணர வேண்டும்.

இருவேறு சக்திகளுக்கிடையே ஆயுத நிலையிலேயே சமாதானம் உருவாக முடியும்

இந்நிலையில் பௌத்தசிங்கள பேரினவாத ஸ்ரீலங்கா அரசும் ரணசிங்க பிரேமதாசாவும் ''தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே போட்டாலே அவர்களுடனான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படும்'' என்ற அழைப்பானது சமாதானத்தைப் பற்றிய மாயையே ஆகும். மாறாக தமிழீழ மக்களது உரிமைகளை தமிழீழ மக்களது இதுவரைகால தியாகங்களை பௌத்த சிங்கள பேரினவாத ஸ்ரீலங்கா அரசுக்கு தாரை வார்த்துக் கொடுத்து அடிமைச்சாசனம் எழுதுவதற்காக விடுக்கப்படும் ஒரு அழைப்பே ஆகும் என்பதை நாம் உணரவேண்டும்.

### யாருடன் சமாதானம்?

சமாதானஉடன்பாடு யாருடன் மேற்கொள்வது என்பது குறித்து நாம் முக்கிய கவனத்தில் எடுத்துக் கொள்ளுவது அவசியமாகும். இருவேறுபட்ட சக்திகளுக்கிடையே நிலவுவது பகைமை முரண்பாடே அன்றி, சிநேக முரண்பாடு அல்ல. பௌத்த சிங்கள பேரின வாத ஸ்ரீலங்கா அரசுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் நிலவுவதும் பகைமை முரண்பாடே

**இராஜலிங்கம்**

அன்றி சிநேக முரண்பாடல்ல. அதாவது தமிழ் மக்களை ஆள நினைக்கும், அடக்க நினைக்கும் ஸ்ரீலங்காவின் போக்கிலிருந்து உருவானதே இந்த பகைமை முரண்பாடாகும். பகைமை முரண்பாடு நிலவும் பௌத்த சிங்கள பேரினவாத அரசுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் நிரந்தரமான சமாதானமென்பது உருவாக முடியாது. தற்காலிகமான சமாதானம்தோற்றுவிக்கப் படுமேயாகிலும் கூட பாலஸ்தீனவிடுதலை இயக்கத்தலைவர்யாசீர் அரபாத் கூறியதற்கொப்ப ஸ்ரீலங்காஅரசைநோக்கி''யுத்தம் என்றால் யுத்தம், சமாதானம் என்றால் சமாதானம்'' என்று நாம் தொடுக்கும் அறைகூவலுக்கூடாகவே இடம் பெற முடியும் என்பது தான் உண்மை.

### பௌத்த சிங்களத்தின் வங்குரோத்து நிலைமை

''யுத்தம் என்றால் யுத்தம்; சமாதானம் என்றால் சமாதானம்'' என்ற அறைகூவலை கொச்சைப்படுத்தும் விதத்தில் தமிழ் மக்களை நோக்கித் தொடுத்த பௌத்த சிங்களபேரினவாத சிறிலங்காவும் ரணசிங்க பிரேமதாசாவும் அண்மையில் சில நாட்களாக சமாதானத்தைப் பற்றி குரல் கொடுத்து வருவதையும் நாம் நோக்குதல் அவசியமானதாகும்.

> **சமாதானம் என்பது சமபலத்தின் (Balance of Power) ஊடாகவே உருவாக் முடியும். எனவே சமாதானம் என்றால் என்ன? எந்த நிலையில் சமாதானம்? யாருடன் சமாதானம் என்பதில் நாம் தெளிவு பெறுதல் அவசியம்.**

இந்திய ஆக்கிரமிப்புப்படையினர் தமிழீழ மண்ணில் நுழைவதற்கு முன்பு தமிழீழ மக்களுடன் தொடுத்த யுத்தத்தினாலும், அதன் பின்பு தென்னிலங்கையில் ஜனதா விமுக்தி பெரமுனையினருடன் தொடுத்த யுத்தத்தினாலும், அதன் பொருளாதார ரீதியாக வங்குரோத்து நிலைமை ஏற்பட்டுள்ளதுடன் அதள பாதாளத்திலேயே சிறிலங்கா அரசு வீழ்ந்து விட்டது. சரிந்து போன இந்தப்பொருளாதார வங்குரோத்து நிலைமையை நிவர்த்தி செய்ய முடியாது திண்டாடும் அதே நேரத்தில் உலக வங்கியிடமும், ஏனைய உலக நாடுகளிடமும் பிச்சை எடுக்கும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறானவொரு பொருளாதார சூழலில் எத்தனை தூரம் வாய் வீராப்பு பேசினும்கூட இலட்சிய வேட்கையுடன் போராடிக் கொண்டிருக்கும் தமிழீழ மக்களுடனான யுத்தத்தை பௌத்த சிங்கள பேரினவாத அரசினால் தொடர்ந்து கொண்டு நடத்த முடியாது என்பதுவே உண்மை நிலைமையாகும். இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கான சமாதான அழைப்பானது சிறிலங்கா அரசின் இயலாமையின் வெளிப்பாடே ஆகும் என்பதையும் நாம் விளங்கிக் கொள்ளுதல் அவசியமானதாகும்.

வியட்நாமுக்கு எதிரான யுத்தத்தின் மூலம் அமெரிக்காவின் பொருளாதாரத்தில் தாக்கம் ஏற்படலாயிற்று. இந்த பொருளாதார சரிவு குறித்தும், அமெரிக்கர்கள் வியட்நாமில் கொல்லப்படுவது குறித்தும் அமெரிக்க அரசுக்கு எதிரான போக்கு அந் நாட்டுக்குள்ளேயே உருவாகலாயிற்று. அப்படியானதொரு எதிர்ப்பு போக்கு அதி உத்தம முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கு எதிராக கடந்த காலத்தில் எழுந்ததை நாம் அறிவோம்.

இன்றைய நிலையிலும் சிறிலங்காவின் வங்குரோத்து பொருளாதார நிலைமையாலும் சிங்களப் படையினர் தமிழீழ மண்ணில் கொல்லப்படுவதாலும் அங்கொரு எதிர் நிலைமையை தோற்றுவித்தல் தவிர்க்கமுடியாததே. அப்படியானதொரு எதிர்நிலைமைக்கு ரணசிங்க பிரேமதாசாவும் பௌத்த சிங்கள பேரினவாத அரசும் முகம் கொடுக்க வேண்டியதும் தவிர்க்க முடியாததே.

# அமெரிக்கா - வியட்நாம் பேச்சுவார்த்தைக்கு

டில்லோனையும் வாஜ்பாயியையும் யாழ்ப்பாணம் வர அழைத்தார்கள். ஏற்றுக்கொள்ளப்பட்டது.

விசேஷ விமானத்தில் தமிழரசுக்கட்சி எம்.பிக்களுடன் டில்லோன், வாஜ்பாயி ஆகியோருடன் அவர்களின் நலன்களைக் கவனிக்கும் இலங்கை அரச அதிகாரிகளும் வந்தனர்.

பலாலி விமான நிலையம் வந்திறங்கியதும் தமிழரசுக் கட்சியினர் டில்லோனையும் வாஜ்பாயியையும் தம்முடன் தேநீர் விருந்துக்கு அழைத்துச் செல்ல எடுத்த முயற்சியை நலன்காக்கும் அதிகாரிகள் முறியடித்துத் தம்முடன் அழைத்துச் சென்றுவிட்டனர்.

அந்தச் சமயத்தில் ''இந்தியா திரும்பியதும் நான் மீண்டும் தனிப்பட்ட முறையில் யாழ்ப்பாணம் வந்து உண்மை நிலையை நேரில் அறிந்து கொள்கிறேன்'' என்று வாஜ்பாயி தமிழரசாரிடம் கூறிச் சென்றார்.

இன்றுவரை வாஜ்பாயி வரவே இல்லை. இப்பொழுது இலங்கைத் தூதுக்குழுவின் அழைப்பை ஏற்று வந்தாலும் சுதந்திரமாக எந்தவித பாதுகாப்பும் நலன்காக்கும் அதிகாரிகளும் இல்லாமல் 'உண்மை நிலையை' அறிந்து செல்ல முடியுமா?

வாஜ்பாயி வருவாரோ இல்லையோ 1983ஆம் ஆண்டிலிருந்து 1987ஆம் ஆண்டு வரை நிலவிய சூழ்நிலை மீண்டும் ஏற்பட்டுவருகிறதென்பது மட்டும் உண்மை!

இலங்கையில் தமிழர் படுகொலை பற்றி இந்தியா கவலையும் ஆழ்ந்த கவலையும் தெரிவித்துக் கொண்டு இருக்கிறது.

நிலைமை மோசமானால் இப்படியே இந்தியா மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்காது என்று இந்தியா எச்சரிக்கை செய்கிறது.

தமிழர் படுகொலையைக் கண்டித்தும் வேதனையை வெளிப்படுத்தியும் தமிழ்நாடு கடையடைப்பும் ஹர்த்தாலும் நடத்துகிறது. (இம்முறை ஐ. நாவில் சமர்ப்பிப்பதற்கு கருணாநிதி ஒரு கோடி கையெழுத்திட்ட மகஜர் மட்டும் தயாரிக்கவில்லை)

தமிழ் நாட்டில் அனைத்து அரசியல் கட்சிகளும் தமிழர் படுகொலையை வன்மையாகக் கண்டிக்கின்றன. மத்தியஅரசு அசமந்தமாக இருப்பதாக இப்போது இந்திராகாங்கிரஸ் மத்திய அரசுமீது குற்றம் சாட்டி வருகிறது.

1983ஆம் ஆண்டிலிருந்து 1987 வரை ஆட்சி பீடத்திலிருந்தவர்கள் இப்போது எதிர்க்கட்சியில் இருக்கிறார்கள். எதிர்க்கட்சியிலிருந்த பலரும் இப்போது ஆட்சிபீடத்திலிருக்கிறார்கள். இதுதான் இன்றுள்ள வேறுபாடு!

ஜே. ஆர். அரசு இலங்கைக்கு அழைத்த இந்தியப் படையை அனுப்புவதற்கு பிரேமதாசாவிற்கு புலிகளின் உதவி வேண்டியிருந்தது.

இப்பொழுது ஏற்பட்டுவரும் சூழ்நிலைகளின்படி பிரேமதாசா அரசு மீண்டும் இந்தியப் படையை இலங்கைக்கு வலிந்து கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றார் என எண்ணத் தோன்றுகின்றது.

# அமெரிக்கா - வியட்நாம் பேச்சுவார்த்தைக்கு

# சீனா கடும் எதிர்ப்பு

(பீக்கிங்)

வியட்நாமுடன் அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்த முற்படுவதை ஏற்க முடியாது என்று சீனா அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் சீன வெளியுறவு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

கம்போடியாப் பிரச்சினை குறித்து அமெரிக்கா வியட்நாம் அரசிற்கு சார்பாக தனது கொள்கையில் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

இதன் பின்னர் அமெரிக்க வியட்நாமிய பேச்சு வார்த்தையும் நடை பெறப் போகிறது. இது தொடர்பாகவே சீனா இதனை எதிர்த்து இருப்பதாகவும் கூறியது.

காமரூட் கம்யூனிச கெரிலாக்களுக்கு கம்போடியாவில் சீனா ஆதரவு அளித்து வந்தது. அமெரிக்கா மறுபக்கமாக கம்யூனிச கட்சி அல்லாத இளவரசர் சிகானுக் தலைமையிலான எதிர்க்கட்சிக் கூட்டணிக்குத் தமது ஆதரவினை அளிக்கப் போவதாக அறிவித்துள்ளது.

தற்போதைய கம்போடிய ஆட்சியாளருக்கு ஆதரவளித்து வரும் வியட்நாமும் இதே கொள்கையினைத் தற்பொழுது கொண்டிருக்கிறது. அமெரிக்காவின் இக்கொள்கை மாற்றத்தினை கம்போடிய அரசு, வியட்நாமிய அரசு பெரிதும் வரவேற்ற போதும் சீனா கடுமையாக எதிர்க்கிறது.

அமெரிக்க-வியட்நாமிய பேச்சுவார்த்தை தொடர்பாகவும், கொள்கை மாற்றம் தொடர்பாகவும் கருத்து வெளியிட்ட பிரித்தானிய வெளியுறவு அலுவலகம் இப்பேச்சு வார்த்தையானது கம்போடியா பிரச்சினைக்கு உதவும் என்றும், இந்தோனேசிய பிராந்தியத்தில் நிலவும் பிரச்சினைகளுக்கும் உதவும் எனவும் கருத்து வெளியிட்டுள்ளது.

# காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக மீண்டும் டில்லியில் பேச்சு

(இஸ்லாமாபாத்)

காஷ்மீர் பிரச்சினைகுறித்து இந்திய - பாகிஸ்தானிய நாடுகளுக்கிடையே மீண்டும் அடுத்த மாதம் டில்லியில் பேச்சுவார்த்தை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இஸ்லாமாபாத்தில் முடிவடைந்த இரண்டு நாள் பேச்சு வார்த்தையில் இத்தகவலை இரண்டு வெளியுறவு அமைச்சின் அதிகாரிகளும் வெளியிட்டனர்.

காஷ்மீர்நெருக்கடி தொடர்பாக போர் ஒன்று ஏற்படாமல் இருப்பதற்காகவே பேச்சுவார்த்தை நடைபெற்றன.

இந்தியா தரப்பில் தீவிரவாதிகளுக்கான போர்ப் பயிற்சி, ஆயுதங்கள் வழங்கல் தொடர்பான குற்றச்சாட்டும் பாகிஸ்தான் தரப்பில் பாகிஸ்தானிய முஸ்லிம் மக்களின் சுயநிர்ணய உரிமை சம்பந்தமான கருத்தும் வலியுறுத்தப்பட்டது.

# ஈராக்கிய ஜனாதிபதி பதவி ஆயுட்காலப் பதவியாக மாற்றம்

(பாக்தாத்)

ஈராக்கிய ஜனாதிபதி பதவியை ஆயுட்கால பதவியாக மாற்ற ஈராக்கின் தேசிய மன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது.

ஈராக்கில் வெளியாகும் பத்திரிகைகள் இதனை வெளியிட்டுள்ளன. அதே வேளை இதுதொடர்பாக எந்தவொரு அறிவிப்பும் அரசதரப்பில் இருந்து வெளியிடவில்லை.

புதிய அரசியல் திட்டத்திற்கான திட்டங்களை தேசிய மன்றம் பரிசீலித்துக் கொண்டிருக்கும்போது ஈராக்கிய பத்திரிகைகள் இத்தகவலை அறிவித்தன.

ஜனாதிபதி சதாம் உசைனின் கட்டளைப்படியே புதிய அரசியல் திட்டம் எழுதப்படுவதாக கூறப்படுகிறது.

அதேவேளை இவ் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்றும், அத் தேர்தலில் சதாம் உசைனே வெற்றி பெறுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பெற்றோலியம் திருட்டு

# ஈராக்கின் குற்றச்சாட்டிற்கு குவைத் மறுப்பு

(குவைத்)

ஈராக்-குவைத் எல்லைப் பகுதியில் உள்ள பெற்றோலிய எண்ணெய் தொடர்பாக ஈராக் கூறிவந்த குற்றச்சாட்டை குவைத் மறுத்திருக்கிறது.

அரபு லீக் தலைவருக்கு குவைத்தின் சார்பாக கடிதம் எழுதிய அமைச்சர் ஷேக் பாபா இதனைத் தெரிவித்தார்.

கோடிக்கணக்கான டொலர்கள் பெறுமானமுடைய எண்ணெயை குவைத் திருடியதாக ஈராக் குற்றம் சாட்டியிருந்தது தெரிந்ததே.

இதனை மறுத்து எழுதிய கடிதத்தில் அமைச்சர் ஷேக் பாபா ஈராக்கே இவ்வெண்ணெய்க் கிதங்களை அத்துமீறிக் கிண்டியதாக கூறினார். எவ்வளவோ எதிர்ப்புகளையும் மீறி தமது பகுதிக்குள் அவர்கள் கிண்டியதாக கூறினார்.

சமரசமான தீர்விற்கு ஈராக் ஒத்துழைக்காத படியால் அரபு லீக்கே இதனை கண்காணிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணக் குடாநாட்டை எமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர [torn]னையும் போது, எதிரி [torn]து இறுதிப் பலத்தையும் [torn]பிர

## முன்னேற்றமிலாத பேச்சுவார்த்தை

காஷ்மீர் பிரச்சினை சம்பந்தமாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் ஏற்பட்ட முறுகல் நிலையைச் சமாளிப்பதற்காக இந்திய வெளியுறவுச் செயலருக்கும் பாகிஸ்தான்வெளியுறவுச்செயலருக்குமிடையில்கடந்தஇரண்டுதினங்களாக நடைபெற்றுவந்த பேச்சுவார்த்தைகள் முன்னேற்றமெதுவுமில்லாமல் முடிவடைந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# இளைஞர்களில் பெரும்பாலானோர் பார்வையாளராகவே உள்ளனர்

- தினேஷ்

யோகிக்கத்தான் செய்வான் என்பதில் சந்தேகமில்லை. இந்த நிலையைச் சமாளித்து எமது தமிழீழ மண் மீட்பில் வெற்றியடைய எமது பலத்தை அதிகரிக்க வேண்டும். இதற்கு தமிழீழ மக்களாகிய நீங்கள் உங்கள் மக்கள் பலத்தால் எமது பலத்தைப் பன்மடங்கு பலப்படுத்துங்கள்.

இவ்வாறு தமிழீழ விடுதலை புலிகளின் தென்மராட்சிப் பிரதேச அரசியற் பொறுப்பாளர் திரு. பாப்பா கேட்டுக் கொண்டார். திரு. பாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற வட்ட அவைக் கூட்டத்தில் பேசும் போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார். மேலும் அவர்கூறியதாவது;

தமிழீழம் பிரகடனத்திற்குப் பேச்சுவார்த்தை ஒன்றும் அவசியமில்லை ''யுத்தம் ஒன்றே வழி'' இதற்குத் தேவையான ஆட்பலம் நிதிப்பலம் போன்றவற்றையே அதிகரிக்க வேண்டும். அதற்கு மக்கள் தான் முன்வரவேண்டும் என்றார்.

தென்மராட்சி அமைப்பாளர் திரு. தினேஷ் பேசுகையில் எமது விடுதலைப்போராட்டத்தில் இளைஞர்களில் பெரும்பாலானோர் இன்னமும் பார்வையாளர்களாகவே இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் பங்காளிகளாக மாறவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (35)

Registeuredas News Paper at the G. P. O.

# ஈழநாதம்

## இலங்கையில் தமிழர்படுகொலையைக் கண்டித்து

# தமிழகமும் பாண்டிச்சேரியும் நேற்று ஸ்தம்பிதம்; வேதனை வெளிப்பாடு!

(புதுடில்லி)

இலங்கையில் தமிழ் மக்கள் அரசபடைகளினால் கொல்லப் படுவதைக் கண்டித்தும் கவலையும், வேதனையும் தெரிவித்து நேற்றுத் தமிழ்நாட்டிலும், பாண்டிச்சேரியிலும் பூரணஹர்த்தால் அனுஷ்டிக் கப்பட்டது.

நேற்றுக்காலை 6மணிமுதல் மாலை 6மணி வரையும் நடைபெற்ற இந்த ஹர்த்தாலில் எதுவித அசம்பாவிதங்களும் இன்றி முழுஅமைதியாக நடைபெற்றதாக அறிவிக்கபபடுகிறது.

ஆளும் திராவிட முன்னேற்றக்கழகம் விடுத்த அழைப்பைத்தொடர்ந்துநடைபெற்ற இந்த ஹர்த்தாலுக்கு அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம், இந்திராகாங்கிரஸ் உட்பட சகல அரசியல் கட்சிகளும் தொண்டர் நிறுவனங்களும் ஆதரவு தெரிவித்தன,

ஆஸ்பத்திரிகள், மின்சாரம், குடிநீர், பத்திரிகைகள் போன்ற பகுதி வேலைகளைத் தவிர போக்குவரத்துக்கள், கடைகள், தனியார் அலுவலகங்கள் எதுவும் செயற்படவில்லை.

மாநில அரசு அலுவலகங்களுக்கு விடுமுறைதினமாக பிரகடனப்படுத்தப்பட்டது. பொது நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் சம்பளத்துடன் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டது.

இதபோல மத்திய அரசு அலுவலகங்களின் ஊழியர்கள் நேற்று போக்குவரத்துக்கள் இல்லாததால் விசேட விடுமுறையாகஅறிவிக்கப்பட்டது.

ரயில் போக்குவரத்துக்கள் காலை ஆறுமணிக்கு அந்தந்த நிலையங்களில் நிறுத்தப்பட்டன. சில ரயில் சேவைகள் ரத்துச்செய்யப்பட்டன. சில மாற்றியமைக்கப்பட்டன.

விமானப் போக்குவரத்துக்களும் காலை ஆறு மணிக்குப் பின்னர் நடைபெறவில்லை. அதற்கு ஏற்றவாறு அவற்றின் நேர அட்டவணை மாற்றப்பட்டது. காலை ஆறு மணிக்குப் பின்னர் எந்த விமானங்களும் புறப்படவில்லை.

வன்செயல்களைத் தடுப்பதற்கு முன்னெச்சரிக்கையாக எழுபத்தைந்து சமூக விரோதிகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

## நொச்சிமோட்டைபாடசாலையில் வவுனியா செயலகம்

(வவுனியா)

நொச்சிமோட்டை பாடசாலை தற்போது வவுனியா கச்சேரியாக செயல்பட்டுவருகிறது.

வவுனியா மாவட்டத்தில் உள்ள அகதி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் இப்பாடசாலை கச்சேரியாக இயங்க வைக்கப் பட்டுள்ளது.

வவுனியா அரசாங்க அதிபரும், வேறு சில அதிகாரிகளுமே வவுனியா நகரப் பகுதிக்குச் சென்று வருகின்றனர்.

அரசாங்க அதிகாரிகளில் பலர் இராணுவ நடவடிக்கை காரணமாக அச்சப்பட்டு, நகரப்பகுதி செல்வதை தவிர்த்துக் கொண்டுள்ளனர்.

இதே சமயம் வவுனியா தெற்குத் தமிழ்ப்பிரிவு உதவி அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா அற்புதராசாவின் வீடு இராணுவத்தினரால் உடைக்கப்பட்டு, அங்கிருந்த பொருட்கள் அபகரிக்கப்பட்டதை அடுத்து, மேற்படி அரசாங்க அதிபர், யாழ் சென்று தங்கியுள்ளார்.

இவருக்குப் பதிலாக மேற்படி பிரிவுக்கு தற்காலிகமாக இன்னொருவர் உதவி அரசாங்க அதிபராக நியமிக்கப் பட்டுள்ளார். (தி)

## நிரந்தர சுபீட்சத்திற்காக போராளிகளுடன் சேருங்கள்

### 'நிழல்கள்' கூட்டத்தில் - பகீன்

எமது மக்கள் பலர் தமது சந்தோஷம் குறைந்து விடுமா என அஞ்சுகின்றனர். ஆனால் இத்தற்காலிக சந்தோஷத்தை தொடர்ந்தும் அனுபவிக்க முடியாதென்பது உண்மை.

இவ்வாறு புங்கங்குளம் றேடியன்ற் கல்வி நிலையத்தில் நடைபெற்ற 'நிழல்கள்' சமூக சேவைப்பிரிவுக் கூட்டத்தில் அரியாலை பிரதேச விடுதலைப் புலிகள் மக்கள்

## படுகொலைகளைக் கண்டித்து அன்னையர் தீர்மானம்

### தலைவி சரஸ்வதி

தமிழீழப் பிரதேசமெங்கும் சிறிலங்கா அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் தமிழ் பேசும் மக்கள் மீதான பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் பற்றியும் அதன் விளைவாக ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான சூழ்நிலை பற்றியுமான கலந்துரையாடல்ஒன்று யாழ். மாவட்ட அன்னையர் முன்னணியினரால் நேற்று மாலை ஆறுமணியளவில் யாழ், கோண்டாவில் மேற்கிலுள்ள இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

மேற்படி அன்னையர் முன்னணியின் தலைவி திருமதி சரஸ்வதி கனகரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், தற்சமயம் அம்பாறை மாவட்டத்திலும் ஏனைய கிழக்குப்

கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் எம்மக்களுக்கெதிரான அரசபயங்கரவாத நடவடிக்கைகள் யாவும் உலக நாடுகளின் கவனத்துக்குக் கொண்டு வரப்படவேண்டியதன் முக்கியத்துவம் பற்றியும் ஆராயப்பட்டது.


இன்னும் தமிழ்ப்பேசும் மக்கள்மீது ஏற்படுத்தப்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையைக் கண்டித்ததுடன் இனிவரும் நெருக்கடியான காலகட்டங்களில் எம் மக்சள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் சில முக்கிய தீர்மானங்கள் இக்கூட்டத்தில் எடுக்கப்பட்டன.

அடுத்த கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 9 மணி

## கொக்குவிலில் கசிப்புமுறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரிக்கு அருகாமையில் நேற்று முன்தினம் கசிப்பு உற்பத்தி செய்வோர் விடுதலைப் புலிகளால் பிடிக்கப் பட்டார்கள். இவர்களிடமிருந்து உபகரணங்கள், சீனி, சோடா என்பனவும் கைப்பற்றப்பட்டன,




பதின் நான்கு வயதுச் சிறுவன் வரைந்த கருத்துப் படம் இது

## எங்களுடன் இணைந்தால் இறுதி வெற்றி கிட்டும்

(யாழ்ப்பாணம்) -ரங்கன்

இது இறுதிக்கட்டப் போராட்டம். புலிகள் சிலவேளை காட்டுக்கு ஓடுவார்கள் என எவரும் நினைக்க வேண்டாம். நாம் மக்களுடன் இருந்தே இறுதிவரை போராடுவோம். மக்கள் இப் போராட்டத்தில் இருந்து விலகிச் செல்லாது எம்முடன் இணைந்தால் மட்டுமே இறுதி இலட்சியத்தை அடையமுடியும் என நல்லூர் சாதனா பாடசாலையில் நேற்று நடைபெற்ற முதலுதவிப் பயிற்சி பெறவந்த முறைசாராக்கல்வி மாணவர்களுடனான கலந்துரையாடலில் நல்லூர் பிரதேசப் பொறுப்பாளர் ரங்கன் தெரிவித்தார்.

மேலும்திரு ரங்கன் பேசுகையில், ''இப்போராட்டத்தில் ஆயுதமேந்திப் போரிடுவது மட்டுமே மாணவர் பங்களிப்பாகாது. எமது பல்வேறு வேலைத்திட்டங்களில் மாணவர் பங்கு கொள்ளலாம். பதுங்குகுழி அமைத்தல், காயப்பட்ட போராளிகளைப் பராமரித்தல், உணவு தயாரித்தல், அகதிகட்கு உதவுதல், முதலுதவி செய்தல் போன்ற பணிகளிலும் மாணவர்கள் ஈடுபட வேண்டும்'' என்றார்.

முறைசராப் பிரிவில் கல்வி பயிலும் மாணவர்களும், பாடசாலை மாணவர்களும் பெருந்தொகையாக இம்முதலுதவிப் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டனர். தொடர்ந்து நான்கு நாட்கள் செய்முறைப் பயிற்சியுடன் இவ்வகுப்புக்கள் நடாத்தப்படும்.

இங்குபயிற்சி பெறும் மாணவர்கள்துணைப்படைப்பயிற்சி பெற விருப்பம் தெரிவித்தனர் அவர்களுக்கு விரைவில்பயிற்சி வழங்கப்படும் என அறிவிக்கப் பட்டது. (மு)

### குப்பிளானில் . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல் வீடுகளும் பலத்த சேதமுற்றனமற்றொரு குண்டு விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்திற்கு அருகில் விழுந்து வெடித்ததில் சனசமூக நிலையமும் அருகிலிருந்த வீடொன்றும் சேதமுற்றன.

### தமிழீழத்தின் . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கரையோரப்பகுதிகளில் வந்து கரை ஒதுங்குகின்றன.

**அரசின் பொய்ப் பிரசாரம்**

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் தமிழ் மக்களுக்கு எல்லா விதமான உதவிகளையும் செய்து வருவதாக சிங்கள அரசு பொய்ப் பிரசாரம் செய்து வருகிறது. ஆனால் நடைமுறையில் எதுவும் செய்யப்படவில்லை.

தமிழீழத்தில் எந்த மாவட்ட

### வவுனியா

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதற்கு இராணுவம் எண்ணியுள்ளதாக அறியப்படுகிறது.

நகரப் பகுதியில் உள்ள பாடசாலைகள், கோவில்கள் போன்றவற்றிலேயே புதிய அகதி முகாம்கள் அமைக்கப்பட உள்ளன. இவற்றில் வந்து தஞ்சமடையாத மக்கள் விடுதலைப் புலிகள் என்று கணிக்கப்பட்டு தாக்கப்படுவார்சள் என்று இராணுவ அதிகாரி ஒருவரால் கூறப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா நகரப் பகுதியில் தற்போது இறம்பைக்குளம் தேவாலயத்தில் மட்டுமே அகதி மக்கள் தங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த முகாமுக்கு அடிக்கடி இராணுவத்தினர் சென்று, வருவதும் குறிப்பிடத்தக்கது,

இதேசமயம் நகரப் பகுதி மக்கள். இப்பகுதியில் உள்ள தமது வீடுகளில் தங்குவதற்கும், கடைகள், மற்றும் வ்யாபார நிலையங்களைத் திறந்து தொழில் செய்வதற்கும் இராணுவத்தினரால் அனுமதி வழங்கப்படவில்லை

இதன் காரணமாக வவுனியா நகரப் பகுதியில் இராணுவத்தினரின் நடமாட்டமே தொடர்ந்து காணப்படுகிறது (தி)

### தபாற்கந்தோர் . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துர்க்காதேவி தேவஸ்தனா

தொடர்ந்தும் அனுபவிக்க முடியாதென்பது உண்மை. எமது இலட்சியம் மக்களின் நிரந்தர சுபீட்சமே. சிங்கள பிரதேசத்தில் தமிழரை அழிப்பதற்காக சகலரும் சகல துறையிலும் ஒன்றிணைகின்றார்கள். ஆனால் இங்கோ போராட்ட நடவடிக்கைகளையும், தேவைகளையும் போராளிகளே செய்கின்றார்கள். இந்நிலை மாறி மக்கள், போராட்டத்துடனும் போராளிகளுடனும் பங்கு கொள்ளும்படி அழைக்கின்றோம்.

### தீவிரவாதிகளின்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதனைஅவதானிப்பதற்கு சர்வதேச பிரதிநிதிகள் குழு அழைக்கப்படும் என்ற கருத்தையே ஜனாதிபதி கூறியிருந்தார். ஆனால் இதனை சிலர் தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர்.

இந்த நாட்டில் தீவிரவாதிகளின் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்க உறுதி பூண்டுள்ளேன் எனத் தெரிவித்துள்ளார்.

டத்தில் அரியாலை பிரதேச விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் பகீன் கூறினார். அத்துடன் நிழல்களின் சேவையையும் நிர்வாகத்தையும் பாராட்டினார்.

மேற்படி கூட்டத்தில் செல்வி மீரா, திரு. சிவமோகன், திரு. நல்லையா, செல்வி அமிதா, திரு. கணநாதன் ஆகியோர் முன்னிலையில் பல செயல் திட்டங்கள் வகுக்கப்பட்டன.

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் பேசும் மாணவர் ஒன்றியத்தின் பொதுக்கூட்டம் (சகல பிரதிநிதிகளுக்குமான) நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11-00 மணிக்கு நல்லூர் பின்வீதியில் உள்ள மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நடைபெறும். க. பொ. த. உயர்தரப் பரீட்சை சம்பந்தமான விடயங்கள் பற்றியே இக்கூட்டத்தில் கலந்துரையாடப்படும்.


வாடிக்கையாளர்களின் கவனத்திற்கு

**நியூ லலிதா ஜுவல்லர்ஸ்**

74/1 கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

எமது ஸ்தாபனம் வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க தற்போது நிலவும் நாட்டின் நிலைமை காரணமாக தினசரி காலை 9 . 00 மணி தொடக்கம் பிற்பகல் 1 . 00 மணிவரை திறந்திருக்கும் என்பதை அறியத்தருகிறோம்.

இங்ஙனம்

**நியூ லலிதா ஸ்தாபனத்தார்**

(B 1258)


சமயம் அம்பாறை மாவட்டத்திலும் ஏனைய கிழக்குப் பகுதிகளிலும்சிங்களராணுவம் மேற்கொண்டுவரும் மனிதாபிமானமற்ற, கண்மூடித்தனமான தாக்குதல்களையும் இனப் படுகொலைகளையும்

## மீட்பு நிதிக் கூட்டம்

(அரியாலை)

அரியாலை மேற்கு கிராம சேவகர் பிரிவிலுள்ள மக்களுக்கான தமிழீழ மீட்பு நிதி சம்பந்தமான விளக்கக் கூட்டம் இன்று (21-7-90) சனிக்கிழமை காலை9 மணிக்கு கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகரத்தினம் யோகி உட்பட மற்றும் பல முன்னணிப் பிரமுகர்கள் கலந்து கொள்ளும் இவ் விளக்கக் கூட்டத்திற்கு அரியாலை மேற்குப் பகுதி மக்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு ஆதரவு வழங்கும் வண்ணம் அரியாலை மேற்கு சிற்றூரவை கோரிக்கை விடுத்துள்ளது.பிற்பகல்நான்கு மணிக்கு நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டமும் காலை ஒன்பது மணிக்கே நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(11)

## கல்லாற்றில் 200 இளைஞர்கள் கைது

(மட்டக்களப்பு)

கல்லாற்றில் 200 இளைஞர்களை இராணுவத்தினர் கைது செய்து கல்முனை இராணுவ முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர்.

இம்மாதம் 19ஆம் திகதி இவர்களை இராணுவத்தினர் அழைத்துச் சென்றனர்.

அத்துடன் அதேநாள் கல்முனையில் உள்ள தமிழ் மக்களை இதே இடத்தைச் சேர்ந்த முஸ்லிம் மக்களும் ஜிகாத் இயக்கத்தினரும் இணைந்து சுட்டுக் கொன்றுள்ளனர்.

அடுத்த கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 9 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## இன்று கூட்டம்

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி சென்ஜோன் முதலுதவிப் படையைச் சேர்ந்த அங்கத்தவர்களுக்கான கூட்டம் இன்றுநடைபெறஉள்ளது

பரியோவான் கல்லூரியில் நடைபெறும் இக் கூட்டம் காலை 10-00 மணிக்கு நடைபெறும். சகல உறுப்பினர்களையும் கூட்டத்திற்கு வரும்படி மேற்படி சங்க செயலாளர் கேட்டுக்கொள்கிறார்.

## தேவாலயம் இடமாற்றம்

அண்மையில் இடம்பெற்ற விமானத்தாக்குதலால் சேதமடைந்த பிரதான வீதியில் உள்ள அங்கிளிக்கன் கிறிஸ்தவ தேவாலயத்தில் மிகுதி தளபாடங்கள் அகற்றப்பட்டு சுண்டுக்குளி சென் யோன்ஸ் தேவாலய சபை மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த அங்கிளிக்கன் சபை தேவாலயத்தில் ஒல்லாந்தரின் பரம்பரை பரம்பரையாக வாழும் யாழ்ப்பாண கிறிஸ்தவர்கள் வழிபட்டு வந்தனர்.

### கூட்டுறவுச் . . . .

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

இதோடு சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த விலை அதிகரிப்பு, தவிர்க்க முடியாத ஒன்றென்றும், தவிர்ப்பதாய் இருந்தால் கூட்டுறவுக் கிளைகள் அனைத்தையும் பூட்டவேண்டி நேரிடும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (தி)

### நேபாம் குண்டு . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேளையில், புதிதாக விஷக் கிருமிகளைக் கொண்டு கொடிய நோய்களைப் பரப்பி தமிழீழ மக்களை அழிக்கமுயல்கிறார்கள் என்று சந்தேகிக்கப் படுகின்றது என்றும் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். (மு)

வும் செய்யப்படவில்லை.

தமிழீழத்தில் எந்த மாவட்ட வைத்தியசாலையும் இயங்கவில்லை. தமிழ் மக்கள் பயன்படுத்தும் எந்த வைத்தியசாலையிலும் போதிய மருந்துகள் இல்லை. ''எக்ஸ்றே'' படம் பிடிக்கும் இயந்திரங்கள் இல்லை. பல சர்வதேச அமைப்புகளுக்கூடாக அரசு தமிழ் மக்களுக்கு உதவுவதாக உலகை ஏமாற்றுகிறது. குறிப்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின்மூலம் உதவுவதாக கூறிவருகின்றது.

### அரைநாளுக்குக் கூடப் போதாது

கிழக்கு மாகாணத்திற்கு இதுவரை எங்குமே உணவுப் பொருட்களோ, மருந்துப் பொருட்களோ அனுப்பப்படவில்லை. இதுவரை வடக்கு மாகாணத்திற்கு 12 லொறிகளில் ஐம்பது தொன் உணவுப் பொருட்கள் மட்டுமே அனுப்பப்பட்டுள்ளது. இது அரை நாளுக்குக்கூடப் போதாது இதைத்தான் சிங்கள அரசு பெரிதாகச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாகத் தந்ததாகக் கூறுகின்றது.

### பொய்ப்பிரசாரத்தை மறுத்ததில்லை

சிங்களதேசம் இச்சர்வதேச அமைப்புகளுக்கூடாகத்தான் தமிழீழ மக்களுக்கு எல்லா உதவிகளும் செய்வதாகபொய் கூறி வருகின்றது. இவ் அமைப்புகள் எதுவுமே சிங்கள அரசின் பொய்ப்பிரசாரத்தை மறுத்ததில்லை.

இதனால் ஏதோஒரு வகையில் இவர்கள் சிங்கள அரசின் இனப்படுகொலைக்கும் துணைபோகிறார்கள். சர்வதேசம் எமது மக்களுக்குச் செய்யும் உதவிகள்கூட சிங்கள தேசத்திற்கே செல்கின்றது.

### நேரடியாக உதவ முன்வர வேண்டும்

சர்வதேச உலகமும் உலகில் வாழும் எட்டுக்கோடித் தமிழ் மக்களும் தமிழீழ மக்களைச் சிங்கள ஆக்கிரமிப்பாளரின் இனப்படுகொலையில் இருந்து காப்பாற்றத் தமிழீழ மக்களுக்கு நேரடியாக உதவ முன்மர வேண்டும்.

வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. (மு)

### கட்டுப்பாட்டில் . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படவில்லை என்றும் எம். எச். மொகமட் கூறினார்.

ஆனால் இந்தியாவிற்கு இலங்கை அரசின் சார்பாகச் சென்றுள்ள திருமதி. இராஜமனோகரி புலேந்திரனே இரு தடவைகள் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும், இந்துக் கோயிலில் இருந்தும் அகதிகளை யாழ்ப்பாணம் அனுப்பினார்.

இந்தியாவுக்குச் சென்றுள்ள இலங்கையர் குழுவில் ரனில் விக்கிரமசிங்கா, திருமதி. இ. புலேந்திரன், அநுராபண்டாரநாயக்கா, தினேஷ் குணவர்த்தனா, பிட்ரமன் வீரக்கோன், எம்.ஏ. அப்துல்லா ஆகியோர் இடம்பெற்றனர்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துர்க்காதேவி தேவஸ்தனா வளவில் உள்ள இந்து இளைஞர் சங்கக் கட்டடத்தில்மேற்படி தபால் நிலையம் இயங்கி வருகின்றது. (26)

### ஊழியர்கள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ங்க, அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

வவுனியா அரசாங்க அலுவலகங்கள், திணைக்களங்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் யூன் மாதத்திற்கான ஊதியம்வழங்க அரசஅதிபர் நடவடிக்கைமேற்கொண்டுள்ளார்

பல அரச ஊழியர்கள் தமது சொந்த இருப்பிடங்களிலிருந்து இடம் பெயர்ந்து அகதிகளாக வெளியேறியிருப்பது குறிப்பிடத்தக்கது. (தி)


## மரண அறிவித்தல்

**பிரம்மஸ்ரீ து. குமாரசாமி ஐயர்**

புன்னாலைக்கட்டுவன் குமாரகோட்டத்தைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் பிரம்மஸ்ரீ து. குமாரசாமி ஐயர் 20 . 8 . 90 அன்று சிவபதமடைந்தார். இவர் நீலாம்பிகையின் அன்புக் கணவரும், ஜெகதீஸ்வரக் குருக்கள், புகனேஸ்வரி, வாகீஸ்வரி (ஆசிரியை நெளுக்குளம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சோ. பாலகிருஷ்ண சர்மா (இ.போ. ச. கோண்டாவில்), ஜெ. ராஜலக்சுமி ஆகியோரின் மாமனாரும், தேவகி, சோமநாதன், சுந்தரராஜன், கிருத்திகா, மதுரா, பவித்திரா, செந்துர்ரா, திவ்வியா ஆகியோரின் அன்புப் பேரனும், சுவர்ணா, தேவநாதனின் பாட்டனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 20 . 8 . 90 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சிவஸ்ரீ. கு. ஜெகதீஸ்வரக்குருக்கள்

புன்னாலைக்கட்டுவன்.

(R 538)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள '' ஈழநாதம் '' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 21 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.